புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

================================================================================

# குறுந்தொகை நெய்தல் நிலத் தலைவன் - சித்திரிப்பு

*முனைவர் ப.அன்பரசி*
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை*

================================================================================

*ஆய்வு நெறிமுறைகள்*

*குறுந்தொகை நெய்தல் திணைப்பாடல்களை விளக்கி உரைப்பதில் விளக்கமுறை அணுகுமுறையினையும் தலைவியின் உள்ள உணர்வுகளை உரைப்பதில் உளவியல் அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*முன்னுரை*

*சங்க அகப்பாடல்கள் அனைத்தும் தலைவியைச் சுற்றியே இயங்கும். தலைவன் பெரும்பாலும் உயர்ந்த பண்புகளை உடையவனாக ‘‘பெருமையும் உரனும் ஆடூஉ மேன’’ (எஸ்.கௌளமாரீஸ்வரி(ப.ஆ.), தொல்காப்பியம், நூ.95) என்ற தொல்காப்பிய இலக்கணத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டிருப்பான். தலைவனது பரத்தமை ஒழுக்கம் கூட அக்காலச் சமுதாய வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே காட்டப்பட்டுள்ளன. ஆனால், குறுந்தொகை நெய்தல் திணை தலைவி கூற்றுப்பாடல்கள் தலைவனைச் சராசரி மனிதனாகக் காட்டியுள்ளதன. தலைவனது உயர்குணங்களைப் போன்றே அல்லாத குணங்களும் பாடப்பட்டுள்ளமையையும் அதன் வாயிலாகப் புலப்படும் தலைவியின் உணர்வுகளையும் ஆராய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.*

*தலைவன் சால்புடையவன் அல்ல*

*தான் விரும்பிய பெண்ணை வருந்தாது மணம்முடித்தல் என்பது தலைவனுக்கான உயர் பண்பு ஆகும். சான்றாண்மைக் குணங்களாக அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்து குணங்களையும் வள்ளுவர்,*

*‘‘அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு*
*ஐந்துசால்பு ஊன்றிய தூண்’’ (பரிமேலழகர்(உ.ஆ.),திருக்குறள்.983)*

*என்ற குறளில் குறிப்பிட்டுள்ளார். தலைவன் தலைவியின் துயரை அறியவில்லை. அதனால் அவன் அன்புடையவன் அல்ல. ஊரார் அலர் தூற்றுவதைப் பெரிதாக எண்ணாததால் அவன் நாணமற்றவன் ஆவான். மனைவியுடன் இருத்தல் வேண்டும் என்ற உலகியலை மறந்ததினால் ஒப்புரவு அற்றவன். தலைவியின் துயர் துடைக்க வாராமையால் கண்ணோட்டமற்றவன். தான் குறித்துச் சென்ற நாளில் வாராமையால் வாய்மையற்றவன் எனத் தலைனது சால்பின்மையைத் தலைவி குறிக்கிறாள்.*

*தலைவி தன் தலைவனை நினைத்தால் மனம் வேகுகின்றது. தலைவனை நினையாமல் இருப்பது இயலாத செயல். தனது காமநோய் உயிர் நீத்து வானம் சென்றாலும் உடன் வருவதாக உள்ளது. இதனை அறிந்து தலைவன் தனக்கு அருளாமல் இருப்பதால் சால்புடையவன் அல்ல என்பதை,*

*‘‘உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது*
*இருப்பின் எம் அளவைத்து அன்றே வருந்தி*
*வான் தோய்வற்றே காமம்*
*சான்றோர் அல்லர் யாம் மரீஇயோரே’’*

(வி.நாகராசன்(உ.ஆ.), குறுந்தொகை, 102)

என்று தலைவி கூறுகிறாள். தன்னால் தலைவனை எண்ணாமல் இருக்க இயலாது என்ற தனதுஅன்பின் மிகுதியையும் தலைவன் தன்னைக் காண வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பினையும் தலைவன் தனக்கு அருளவில்லை என்ற தனது கருத்தினையும் தலைவி குறிப்பிடுகிறாள்.

தலைவனைத் தலைவி ஐயம் கொள்ளுதல்

தலைவியைப் பிரியும் பொழுது தலைவன் கார்ப்பருவத்திற்கு முன்பே வருவேன் எனக் கூறிச் செல்கிறான். ஆனால், தலைவன் கூறிச் சென்ற கார்ப்பருவம் வந்துவிட்டது. கார்ப்பருவத்தில் தலைவன் வரவில்லை. அதனால் தலைவன் தன்னை மறந்து விட்டதாகத் தலைவி ஐயுறுவதை,

"மறந்தோர் மன்ற மறவாம் நட்பாம்
கால மாரி மாலை மாமலை
இன்இசை உருமினம் முரலும்
முன்வரல் ஏமம் அகன்றோரே"

(வி.நாகராசன்(உ.ஆ.), குறுந்தொகை, 200. 1-7)

என்ற அடிகள் விவரிக்கின்றன. நெய்தல் நிலத்தில் தலைவன் பிரியும் கடல் வழிப் பிரிவு நிச்சயமற்ற காத்திருத்தலாக அமைவதன் காரணமாக தலைவிக்கு மிகுதியான துயரம் ஏற்படுகிறது (https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-oct22/44469-2022-11-21-06-43-49). துயரம் மிகுந்ததால் தலைவனைத் தலைவி சந்தேகிக்கும் நிலை ஏற்படுகின்றது.

பகை தரு நட்பே

தலைவன் தலைவிக்கு இடையேயான நட்பு உயர்ந்தது. பல பிறவிகளிலும் தொடர்ந்து வருவது. இம்மை மாறி மறுமையிலும் தொடர்வது என்று கூறப்பட்டது. ஆனால், நெய்தல் நிலத் தலைவனோடு தான் காண்ட நட்பானது நட்பு கொண்ட நாள் முதலே தலைவிக்குத் துன்பத்தினை விளைவித்தலால் இந்நட்பினைப் பகைதரு நட்பாக,

"கைதைஅம் தண்புனற் சேர்ப்பனொடு
செய்தனெம் மன்ற ஓர் பகை தரு நட்பே"

(வி.நாகராசன்(உ.ஆ.), குறுந்தொகை, 304, 7-8)

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. திருமணத்திற்கு முந்தைய களவு வாழ்வு தலைவன் தலைவிக்கு இன்பம் கலந்த துன்பத்தினைத் தருவதாக அமையும். அதனைப் புரிந்து கொள்ளாத தலைவி தனது இயலாமை மற்றும் கோபத்தின் காரணமாகத் தனக்கு தலைவனோடு ஏற்பட்ட நட்பினைப் பகை தருவதாக எண்ணுகிறாள்.

தலைவன் வாய்மையற்றவன்

தலைவன் தலைவியிடம் நட்பு கொள்வதற்கு முன்பு நம்பிக்கையான வார்த்தைகளைக் கூறுவான். அவன் உன்னைப் பிரியேன், விரைந்து மணம் முடிப்பேன், பிரிவை நீட்டிக்கமாட்டேன் என்று கூறி நட்பு கொள்கிறான். களவு வாழ்க்கையில் அலர் தோன்றுகிறது. அதனால் தலைவி தலைவனிடம் செல்ல விழையும் போது அவன் வாய்மையற்றவனாக உள்ளான் என்பதை,

"ஆய்வளை ஞெகிழவும் அயர்வுமெய் நிறுப்பவும்
நோய்மலி வருத்தம் அன்னை அறியின்
உளெனோ வாழ் – தோழி! – விளியாது
உரவுக்கடல் பொருத விரவுமணல் அடைகரை
ஓரை மகளிர் ஓராங்கு ஆட்ட,
ஆய்ந்த அலவன் துன்புறு துனைபரி
துறைவன் சொல்லோ பிற ஆயினவே"

(வி.நாகராசன்(உ.ஆ.), குறுந்தொகை, 316)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

*தலைவன் தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்ற தனது கடமையை மறந்தவனாக உள்ளான். இயற்கைப் புணர்ச்சியின் போது சூள் உரைத்தவன் அதனை நிறைவேற்றும் கடமையை உடையவன் கள்வனாக உள்ளான் என்பதை,*

*“… … … … … … … … … … …. துறைவன்*
*குறியின் ஆயினும் குறிப்பினும் பிறிது ஒன்று*
*அறியாற்கு உரைப்பாலோ, யானே? எய்த்த இப்*
*பணைஎழில் மென்தோள் அணைஇய அந்நாள்*
*பிழையா வஞ்சினம் செய்த*
*களவனும் கடவனும் புனைவனும் தானே”*

*(வி.நாகராசன்(உ.ஆ.), குறுந்தொகை, 318, 3-8)*

*என்ற அடிகள் விவரிக்கின்றன. அவன் பிழையா வஞ்சினம் உடையவன். உணர்த்தினும் உணராதவனாக உள்ளான் எனத் தலைவி எண்ணுகிறாள். தலைவனால் குறித்த நேரத்தில் தலைவியை மணந்து கொள்ள வர இயலாததால் தலைவனது வாய்மையைச் சந்தேகிப்பவளாகத் தலைவி உள்ளாள்.*

*தலைவனது நட்பு துன்பத்தைத் தருதல்*

*களவுக்காலத்தில் தலைவனோடு ஏற்பட்ட நட்பானது, களவின் இடையீட்டால் தொடர இயலாததாயிற்று. அதனால் ஒரு நாள் உண்டான நட்பு பலநாளும் துன்பத்தினைத் தருவதாக அமைந்ததை,*

*“துணைத்த கோதைப் பணைப் பெருந்தோளினர்*
*கடல் ஆடு மகளிர் கானல் இழைத்த*
*சிறுமனைப் புணர்ந்த நட்பே – தோழி –*
*ஒருநாள் துறைவன் துறப்பின்*
*பலநாள் வரூஉம் இன்னாமைத்தே”*

*(வி.நாகராசன்(உ.ஆ.), குறுந்தொகை, 326)*

*என்ற பாடல் விவரிக்கின்றது. தலைவனோடான களவுக்கால நட்பு இன்பத்தினைத் தரவில்லை என வருந்துகிறாள்.*

*தலைவனிடம் மீண்டும் அன்பைப்பெறுவதை விட உயிரை இழத்தல் பெரிது எனல்*

*தலைவன் தலைவியை விட்டுப் பரத்தை மாட்டுப் பிரிந்து செல்கிறாள். மீண்டும் தலைவியைத் தேடி மீண்டும் வருகிறான். அவனை,*

*“அடும்பு அவிழ் அணிமலர் சிதைஇய மீன் அருந்தி*
*தடந்தாள் நாரை இருக்கும் எக்கர்த்*
*தண்ணம் துறைவற் தொடுத்து நம்நலம்*
*கொள்வாம்” என்றி – தோழி! – கொள்வாம்*
*இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய*
*கொடுத்து அவை தா எனக் கூறலின்*
*இன்னாதோ, நம் இன் உயிர் இழப்பே”*

*(வி.நாகராசன்(உ.ஆ.), குறுந்தொகை, 349)*

*என்று கூறி ஏற்க மறுக்கிறாள். வறுமைப்பட்டவர்களது துன்பத்தினைப் போக்கும் பொருட்டுக் கொடுத்த பொருளை மீண்டும் பெறுவது போன்றது தலைவனை ஏற்றுக்கொள்வது அமையும். அதனால் தலைவனை ஏற்றுக்கொள்வதைவிட உயிர்விடுதல் மேலானதாகும் என மறுக்கிறாள்.*

*தலைவனது நட்பால் உயிர்விடத் துணிதல்*

*தலைவனோடான நட்பு தலைவிக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நட்பு கொண்டு சிரித்ததன் பயனாக உயிர்விடத் துணியும் துன்பம் ஏற்பட்டதை,*

*“தொல்கவின் தொலைந்து தோள்நலம் சாஅய்*
*அல்லல் நெஞ்சமோடு அல்கலும் துஞ்சாது*
*பசலை ஆகி விளிவது கொல்லோ”*

*(வி.நாகராசன்(உ.ஆ.), குறுந்தொகை, 381, 1-3)*

*என்ற அடிகள் தெளிவிக்கின்றன. அதாவது தலைவியின் அழகு சிதையும் வகையில் தலைவனது நட்பு வருதத்தத்தினைத் தருகிறது என்கிறாள். தான் தனது உணர்வுக்கு ஏற்ப தலைவனோடு மகிழ்ச்சியாகவும் இருக்கிறாள். பின்பு அதனையே எண்ணி வருந்தவும் செய்கிறாள்.*

*முடிவுரை*

*தலைவனோடு தலைவி கொண்டுள்ள களவுக்கால நட்பினைத் தலைவன் விரைந்து கற்பாக மாற்ற வேண்டும். தலைவன் மணந்துகொள்ள முயற்சிக்காதவனாக உள்ளான். அதனால் தலைவிக்கு மகிழ்ச்சியைத் தந்த நட்பே வருத்தத்தினைத் தருவதாக உள்ளது. இதன் காரணமாக தலைவனது நட்பினைப் பகை என எண்ணுகிறாள். சமூக வாழ்க்கைக்கு ஏற்றவாறு செயல்படாததால் தலைவன் உயர்ந்த பண்புகள் அற்றவனாகக் குறுந்தொகை நெய்தல் திணைப்பாடல்களில் தலைவியால் சித்திரிக்கப்பட்டுள்ளான். நெய்தல் நில வாழ்க்கைச் சூழல், கடல் சார்ந்த பின்புலம் தலைவன், தலைவியினது பிரிவுக்குக் காரணமாக அமைகின்றது. அதனைக் கொண்டு தலைவியின் துன்பம் மிகுதியாகின்றது. துயத்திற்கு ஆட்பட்ட தலைவி தலைவனது போற்றாத குணங்களாகத் தான் எண்ணியவற்றினைப் புலப்படுத்துகின்றாள். தலைவனைப் பற்றிய தலைவியினது எண்ணம் அவளது பாதுகாப்பற்ற மன உணர்வினைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. நெய்தல் நிலத் தலைவி குறிப்பிடும் தலைவனைப் பற்றிய செய்திகள் யாவும் அவளது எண்ணத்தின் வெளிப்பாடாகவே உள்ளன.*

*துணை நின்ற நூல்கள்*


*1. வி.நாகராசன்(உ.ஆ.), குறுந்தொகை, 2007, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், மூன்றாம் அச்சு, சென்னை*

*2. எஸ்.கௌமாரீஸ்வரி(ப.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், 2008, சாரதா பதிப்பகம், 6ஆம் பதிப்பு, சென்னை*

*3. பரிமேலழகர்(உ.ஆ.), திருக்குறள், 2007, சாரதா பதிப்பகம், எட்டாம் பதிப்பு, சென்னை*

*4. https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-oct22/44469-2022-11-21-06-43-49*


********* ********* ********** ********* ********* ********** ********** **********